விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆனி 25 றம்ழான் 17 இதழ் 146

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9—7—82

வெளிவந்துவிட்டது
A/L 82 Aug (LOGIC)
'அளவையியலும் விஞ்ஞானமுறையும்'
(பகுதி II)
ஆசிரியர்
எஸ். எஸ். மனோகரன்
5 வருட வினக்களையும் எதிர் பார்க்கை விடயங்களையும் கொண்ட பரீட்சை வழிகாட்டி விலை 19/50
கிடைக்குமிடங்கள்: ✶ பூபாலசிங்கம் புத்தகசாலை, ✶ ஸ்ரீலங்கா புத்தகசாலை ✶ ஐலண்ட் இன்ஸ்ரிரியூட்.
3803

## இஸ்ரேலிய அதிகாரி வெளியேற்றம்

பம்பாய், ஜூலை 8

இந்தியாவிலுள்ள இஸ்ரேலிய தூதரக அதிகாரி ஒருவரின் நடத்தை காரணமாக அவரை 48 மணித்தியாலத்தில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

பம்பாயிலுள்ள இஸ்ரேலிய கௌன்சில் அதிகாரி திரு. யூசுப் ஹசன் இந்திய பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் ஆட்சேபத்துக்

[8-ம் பக்கம் பார்க்க]

# "சிறிலங்கா சுதந்திரக்கட்சி: எமக்குத்தான் பூரணஉரிமை!"

## தெரிவுக் குழு தெரிவித்திருப்பதாக 'மைத்திரி' அறிவிப்பு

### "கைச்சின்னமும், நீலநிறமும் அங்கீகாரம்"

(கொழும்பு)

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து திருவாளர்கள் மைத்திரிபால சேனநயக்கா, அநுரா பண்டாரநாயக்கா, ஆர். பி. விஜேசிறி, ஜனாப் ஹலீம் இஷாக் ஆகியோரைக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு அறிக்கையின்படி, எமது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிதான் உண்மையான கட்சி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது."

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் [மைத்திரிபிரிவு] தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

**சின்னமும் நிறமும்**

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது;

கைச் சின்னமும், நீலநிறமும் எமக்குக் கிடைக்குமென்று எதிர் பார்க்கிறேன். பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை தேர்தல் ஆணையாளர் புறக்கணிக்க முடியாது. அவர் அதன் அடிப்படையிலேயே செயல்படுவார் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

**அரசுடன் சேரமாட்டோம்**

"எமது கட்சி அரசாங்கத்தை எதிர்த்துப் போட்டியிட்டு ஆட்சிஅமைக்குமேதவிர அரசாங்கத்துடன் ஒருபோதும் சேரமாட்டாது.

"அரசி" லமைப்பில்தேர்தல் சிருத்தங்களைக் கொண்டுவருவதன் நோக்கம், அரசாங்கம் தானே தொடர்ந்து ஆட்சியிலிருக்கவேண்டுமென்பதாகும். என்றார்.

**சூரியரும் கலந்துகொண்டார்**

இம்மாநாட்டில் முன்னாள் தபால், தந்தி தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியரும் கலந்துகொண்டார். (ம-வெ)

## 80 வேலைநிறுத்த ஊழியர் விவகாரம்: 'தற்கொலை'க்கதைகளை அரசு நினைவில் கொள்ளவேண்டும்

### பாராளுமன்றத்தில் 'ஆலால்' உரை

[கொழும்பு]

1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் வேலைஇழந்தவர்களுக்கு வேலைவழங்குவதில் அமைச்சுக்கள் சீரான கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை.

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

80 வேலை நிறுத்தத்தில் வேலை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவதில் சில அமைச்சுக்கள் மட்டுமே பொறுப்புடன் நடந்துள்ளன.

இவர்களுக்கு முன்னைய சம்பளம் வழங்குவதிலும் சீரான நடைமுறைகடைப்பிடிக்கப்படவில்லை.

இந்த ஊழியர்களிடமிருந்து சிறந்த சேவையை எதிர்பார்க்க வேண்டுமானால் அவர்களின் பொருளாதாரப் பளுவைக் குறைக்க அவர்களது முன்னைய சம்பளம் முழுவதையும் அரசு வழங்க வேண்டும்.

அவ்வேலை நிறுத்தத்தில் வேலை இழந்த பலர் தற்கொலை செய்து கொண்டது சகலரும் அறிந்ததே,

எனவே அரசு தற்கொலைக் கதைகளை நினைவில் வைத்து வேலை நிறுத்தக்காரர்களின் முழுச்சம்பளத்தையும் வழங்க வேண்டும். [ம-இ]

## லெபனானிலுள்ளஇலங்கையர் அரசு முயற்சி தோல்வி?

(கொழும்பு)

லெபனானிலுள்ள இலங்கையர் பற்றிய விபரங்களை அறிய எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று வெளிநாட்டமைச்சுத் தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரி ஒருவரை அங்கு அனுப்பி விபரம் திரட்டப்படவிருப்பதாகவெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. ஸி எஸ். ஹமீட் தெரிவித்தார்.

பெய்ரூட்டிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் அங்குள்ள இலங்கையர் சிலர் தஞ்சமடைந்து, அங்கிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (க-இ)

## கிரிக்கட் டெஸ்ட்

### இங்--329--3

லண்டன். ஜூலை,8

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமான 3வது இறுதி கிரிக்கட் டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக் குழு 3 விக்கட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களைப் பெறறது. (இ)

## இலங்கையரை திருப்பி அழைப்பதில் சைப்பிரஸ் உதவியை அரசு கோரியுள்ளது

(கொழும்பு)

"லெபனான்—இஸ்ரேல் போரில் இஸ்ரேலிய விரர்களினால் சிறைபிடிக்கப்பட்டோரில் இலங்கையரும் இருப்பதாக "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகையில் மட்டுமே செய்தி வெளியிடப்பட்டிருந்தது அது பற்றி உத்தியோகபூர்வமாக இலங்கை அரசுக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை."

இவ்வாறு வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ ஸி எஸ். ஹமீட் நேற்று முன் தினம் பாராளமன்றத்தில் தெரிவித்தார்.

சாவகச்சேரி எம் பி திரு. வி. என். நவரத்தினத்தின் கேள்வி ஒன்றுக்குப்பதில் அளிக்கையிலேயே ஜனாப் ஹமீட் மேற்கண்டவாறு தெரிவித்தார்

லெபனானில் உள்ள இலங்கையரை இங்கு திருப்பி அழைக்க சைப்பிரஸ் அரசின் உதவி இப்போது நாடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம இ)

உ
பேராசிரியர் பிரம்மஸ்ரீ
கா. கைலாசநாதக்குருக்கள்
அவர்களின்
மணிவிழா
10-7-1982 சனிக்கிழமை மாலை 5-00மணிமுதல்
வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய
மண்டபத்தில்
கலைமகள் ஆசிரியர்
வாகீசகலாநிதி
ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன் M. A.
அவர்கள்
தலைமையில் நடைபெறும்.
பல அறிஞர்கள் பாராட்டுரை வழங்குவார்கள்
அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
மணிவிழாச்சபை
8-7-1982 [3817]

YARL HALL MAIN STREET JAFFNA
G. C. E. A/L 1983
புதிய வகுப்பு ஆரம்பம் 25-7-82 ஞாயிறு 11-30 மணி
தாவரவியல்: திரு. சிவவீரசிங்கம்
விலங்கியல்: திரு. தங்கராஜா
இரசாயனம்: பிரிவு A திரு. சத்தீஸ்வரன்
பிரிவு B திரு. மனோகரன்
பௌதிகம்: திரு தவபாலச்சந்திரன்
தூயகணிதம், பிரயோக கணிதம்: திரு. A.பத்மநாதன்
விண்ணப்பங்கள் 23-7 82 வரை ஏற்றுக்கொள்ளப்படும்
3810

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அரசாங்க அலுவலரின் சொந்தப்பாவனையில் சிறந்த நிலையிலுள்ள 9 சிறி தொடர் பிலக்க 'ஹில்மன் அவென்ஜர்' (Hillman Avenger) கார் நியாய விலையில் உடனடி விற்பனைக்கு உண்டு. பெயின்ற், டயர்கள், பற்றறி அனைத்துமே புதியவை. தொடர்பு: ஸ்ரீதரன், மின்சார சபை, சுன்னாகம். லீவு நாட்களில் ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. 3806

## WANTED

Accounts Clerk wanted, Apply with experience and Salary expected Residence within Jaffna Municipality preferred. Advt. No: 3801, C/o Eelanadu, Jaffna. 3801

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஐந்து வருடத்திற்கு மேல் வியாபார அனுபவமுள்ள விற்பனை லிகிதர் (Sales Clerk) உடனடியாகத் தேவை இவர் ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல எழுத்து எழுதக் கூடியவராயும், நாற்பது வயதுக்குக் குறைந்தவராயும், நம்பிக்கைக்குரியவராயும் இருத்தல் வேண்டும். தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் 15-07-82முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3812 C/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3812

எமது தயாரிப்புகளை வானில் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. வின்னை பிக்க பவுண் சோப் தொழிற்சாலை, சுந்தரமூர்த்தி கட்டிடம், 7c, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3809

யாழ்ப்பாணம் றேயல் டீஸ் பென்சரிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர்கள் உடன் தேவை. நேரில் வரவும். 3772

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் Hotel Management, French மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த ஆய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம்: 9-7-82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3755)

யாழ் நகரில் அதிக செய்முறை அறிமுறையுடன் குறுகிய காலத்தில், வெல்டிங் வயறிங், மோட்டார் எந்திரவியல், பயிற்சிகள் ஆரம்பம் 10-7-82. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். The Jaffna Engineering College- J.E.C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (புகையிரக் கடவைக்கு அருகில்). 3777

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி விழா

10-7-82, காலை 7-30 திருப்பலி. மாலை 6-30 கலை நிகழ்ச்சிகள். பெற்றோர், பழைய மாணவர், அன்பர்கள், அனுதாபிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர்.

3808

## அறிவித்தல்

எமது நிறுவனத்தில் காணி விற்பனை திட்ட உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. வைத்திலிங்கம் துரைராஜா தற்போது எமது சேவையில் தொடர்ந்து இல்லை என்பதையும், கம்பெனி சார்பாக அவர் செய்யும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்பாளிகளல்ல என்பதையும் வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறோம்.

**த பினான்ஸ் கம்பனி லிமிட்.**
149, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# திருடர் கைவரிசை

[மண்டைதீவு]

அயலில் உள்ள கோவிலுக்கு இரவு திருவிழா பார்க்க வீட்டுக்காரர்கள் சென்ற சமயம் பார்த்து திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து. தங்கநகைகளையும், அங்கிருந்த பணத்தையும் திருடிச் சென்று விட்டார்களாம்.

இச்சம்பவம் வேலணை செட்டிபுலம் என்னும் இடத்தினுள்ள திரு. செல்லையா செல்வானந்தம் என்பவரது வீட்டில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து நயினாதீவை சேர்ந்த வாலிபர் ஒருவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றார்கள்.

# பெரியபுராணச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்று வரும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவில் இன்று திருக்குறிப்புத் தொண்டர் வரலாறு பற்றி திருமதி சிவபாக்கியம் பாலநாதன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

# 'வாழும்போதே கலைஞர்களை கௌரவிக்க வேண்டும்''

(அரியாலை)

''சமூகத்தில் இலைமறை காயாக இருக்கும் நாடகக் கலைஞர்களையும், அண்ணாவி மார்களையும், சமூக சேவையாளர்களையும் பாராட்டி, அவர்கள் இத்துறைகளுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளை மக்களுக்கு எடுத்துக்கூறு அவர்களுக்குப் பட்டமளித்துக் கௌரவிக்கும் பணி பாராட்டுக்குரியது'' என்று யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் கோண்டாவிலில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 32-வது வருடாந்த மகாநாட்டில் அமரர் கதிரேச அரங்கில் நடைபெற்ற 'பாராட்டும் பட்டமளிப்பும்' வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு மு. அமிர்தலிங்கம் மங்கள விளக்கேற்றிவைக்க, திரு. தம்பி ஆனந்தன் அரங்கைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் தொடர்ந்து பேசுகையில், ''கலைஞர்களும் சமூக சேவையாளர்களும் உயிருடன் இருக்கும் காலத்திலேதான் இவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். இவர்கள் இத்துறைகளுக்கு ஆற்றிய சேவைகள் பற்றிப் பேசப்படவேண்டும். இதன் மூலம் இச்சேவையாளர்கள் தாம் ஆற்றிய சேவைகளை நாடும், சமூகமும் மதிக்கிறது என்ற உணர்வு பெறுவார்கள் இறந்த பின் விழாவெடுத்துப் பேசுவதிலும், கௌரவிப்பதிலும் அர்த்தமில்லை'' என்றார்.

அரியாலையைச் சேர்ந்த திரு. நா. கணபதிப்பிள்ளை நாடகத் துறைக்கு ஆற்றியுள்ள சேவைகளைப் பாராட்டி அன்னாருக்கு 'நாடகச் சக்கரவர்த்தி' என்ற கௌரவப்பட்டமும், கோண்டாவிலைச் சேர்ந்த நாட்டுக் கூத்து அண்ணாவியார் திரு. நாகமுத்து செட்டியாருக்கு 'கூத்திசை மணி' என்றகௌரவப்பட்டமும், தெல்லிப்பளையைச் சேர்ந்த கட்டிடத்துறை விற்பன்னராகிய திரு. இ. நாகேந்திரத்திற்கு 'கட்டிட விற்பன்னர்' என்ற கௌரவப் பட்டமும் மகாநாட்டில் மேலதிக அரசாங்க அதிபர் வழங்கி அவர்களுக்கு மாலை அணிவித்து அவர்களது சேவைகளைப் பாராட்டினார். இவர்களின் சேவைகளைப்பாராட்டி திருவாளர்கள் சி. சின்னையா எஸ். விசுவலிங்கம், எஸ் சொலமன் ஆகியோர் பேசினார்கள். [அ]

# பாடசாலை விளையாட்டு போட்டி

[யாழ்ப்பாணம்]

தென்மட்டுவில் மாதர் சங்கம் நடாத்தும் தேனொளி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சாவகச்சேரி எம்.பி திரு. வ. ந. நவரத்தினம், தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க துரைராசா, கல்வியமைச்சைச் சேர்ந்த கலாநிதி செல்வி சிறோன்மணி இராசரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர். [உ]

# நடவடிக்கை

சென்னை ஜுலை 8

கோயம்புத்தூரில் 6 மாத காலம் மூடப்பட்டிருந்த பஞ்சாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [க]

# நெல்மூடைகள் திருட்டு: இருவருக்கு றிமாண்ட்

(மன்னார்)

இரவு வேளையில் சுமார் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 8 நெல் மூடைகளைக்களவாடிய இருவர் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார்- பறப்பாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த அலோசியஸ் மியாங் என்பவரது வீட்டு நெல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 8 நெல் மூடைகள் இரவு திருடப்பட்டது, இது சம்பந்தமாக மன்னார் பொலிஸ் சார்சண்ட் பரமானந்தம், காஸ்ண்டபிள்ஆர். எஸ். ஜெயபாலன் ஆகியோர் விசாரணை மேற்கொண்டு மாணிக்கம் கண்ணன், சுப்பையா இலங்கை நேசன் ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தியபோது திருடப்பட்ட நெல் மூடைகளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் நீதவான் மடவெல முன் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபர்களை மறு விசாரணைவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# இன்றைய பலன்

ஆனி மாதம் 25-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(9—7—82)

மேடம்: அன்னியர்கள் வாழ்க்கையில் குறுக்கிடுவார்கள். தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும், புண்ணிய ஸ்தல யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம்.

இடபம்: வாகனச் சாரதிகள் பொது மக்களின் நன்மதிப்பைப் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்துச் சிபார்சும்கிடைக்கும். நல்ல தினம்.

மிதுனம்: எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது. மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பாராத இடத்தில் இருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு.

கடகம்: சூழ்ச்சிவலை விரிக்கும். மனச்சாட்சியின்படி நடந்து கொள்ளவும். மற்றவர்களை நம்ப வேண்டும். சிலர் வாழ்க்கையில் வழக்கு விவகாரத்தினால் அதிக பணம்செலவாகும்

சிங்கம்: ஒளிக்கதிர்கள் உங்கள்வாழ்க்கையில் பரவும் உல்லாசமாகப் பொழுது போக்க விரும்புவீர்கள். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு. களத்திர சுகமுண்டு.

கன்னி: செய் தொழில் தளர்ச்சி ஏற்படும். சதிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர். பிரயாணத்தை தவிர்க்கவும். இறை நம்பிக்கை நன்று

துலாம்: பிதாவழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம். ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள். பிறந்தகத்தின் நினைவு தலை தூக்கக் கூடும். நல்லநாள்.

விருட்சிகம்: தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும். எந்த நிலைமையையும் கட்டுப்படுத்துவதில் தனிப் புகழ் அடைவீர்கள். வரவிலும் திருப்திகரமான நிலையைக் குறிக்கின்றது.

தனு: பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும். மக்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும் பொருள் வரவுக்கு இடமுண்டு.

மகரம்: எதிர்பாராதவகையில் பொருட்செலவுக்கு இடம் உண்டு. தொழில்துறையில் சிறிது மனக்கசப்பு தென்படலாம். அதிக சிந்தனைக்குஇடம் உண்டு.

கும்பம்: சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள். எதிலும்விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்தமுடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். பொருளும் செலவாகும்.

மீனம்: சமயோசித புத்தி உங்களுக்குத் தாராளமான சிந்தனைகளைத் தேடித் தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# ஆலயத்துக்குச் சென்ற சிறுவன் சேற்றில் புதையுண்டு மரணம்

(மண்டைதீவு)

மடு அந்தோனியார் ஆலயத்துக்குப் பெற்றோர்களுடன் சென்ற 13 வயதுச் சிறுவன் பரிதாபமாக மரணமடைந்தான்.

மடுவிலுள்ள குளமொன்றில் குளித்துக்கொண்டிருந்தபோது இம் மரணம் நிகழ்ந்தது. குளித்துக்கொண்டிருந்த போது சிறுவன் சேற்றுக்குள் புதையுண்டுவிட்டதாக சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவைச் சேர்ந்த யேசுநேசன் என்ற இந்தச் சிறுவனது சடலத்தை வீட்டுக்கு பெற்றோர் பிணமாகக் கொண்டுவந்த காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

சேற்றுக்குள் புதையுண்டதால் மரணம் சம்பவித்தது என்று மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

# தண்ணீர் திட்டம்

சென்னை ஜுலை 8

1கோடியே 18 லட்சம் ரூபா செலவினாலான திருவண்ணாமலைத் தண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. [கு]

# நாளை நடக்கும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தற்காலிக ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் மேற்படி சங்கத்தலைவர் திரு. பி. அருள்மரியதஸ் தலைமையில் நடைபெறவிருக்கிறது

முதல் நியமனத்திகதி, இலக்கம், பரீட்சைபெறுபேறுகள், சுட்டிலக்கம் ஆகிய வற்றைத் தவறாது இக்கூட்டத்துக்கு கொண்டு வரும்படி செயலாளர் செல்வி ஜெ. சோமசுந்தரம் கேட்டுள்ளார். [மர்]

## 4000 துருப்புக்களுடன்

# லெபனுனுக்கு 250 கிலோ மீட்டர் தூரத்தில் அமெரிக்க கப்பல்!

## லெபனுன் தலைநகரில் மீண்டும் போர் முரசு

லண்டன், ஜூலை 8

ஆயிரத்துக்கும் அதிகமான துருப்புக்களுடன் அமெரிக்க கப்பலொன்று லெபனுனை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இக்கப்பல் தற்பொழுது லெபனுனிலிருந்து 250 கிலோ மீட்டர் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### தீர்வுக்கான அறிகுறிஇல்லை

பெய்ருட்டில், லெபனுன் பிரச்சனையை தீர்ப்பதற்கான மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் இப்பிரச்னைக்கு தீர்வுகாணும் அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என அவதானிகள் தெரிவித்தனர்.

இம்மாநாட்டில் அமெரிக்காவின் திட்டம்பற்றியும் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

இதேசமயம் அமெரிக்காவின் திட்டம், பாலஸ்தீனியர்களை, லெபனுனிலிருந்து வெளியேற்ற உதவிசெய்யும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

### லெபனுன்நிலை

அமெரிக்காவின் திட்டத்திற்கு பலஸ்தீனியர்கள் தயாரா? இவ்விடயத்தில் லெபனுனின் நிலை என்ன என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

லெபனுனில் தலைநகரில இஸ்ரேலியபடைகளுக்கும் பலஸ்தீனியர்களுக்கும், நேற்று மீண்டும், கடுமையானபோர் ஆரம்பித்துள்ளது.

லெபனுன் நாட்டு தலைவர்கள் அமெரிக்க திட்டம்பற்றி ஆராய்ந்து வருகிறுர்கள்.

பலஸ்தீனியர்களை வெளியேற்ற உதவியாக அமெரிக்க துருப்புகளை அனுப்பதயாராக இருப்பதாக அமெரிக்கத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தவறணை மூலம் வருமானம்

சென்னை ஜூலை 8

கள்ளுத் தவறணை, சாராயத் தவறணைகளை ஏலத்திற்கு விட்டதன் மூலம் தமிழ் நாடு அரசுக்கு 6கோடி 31 லட்சம் ரூபா வருவாய் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்து. [க]

## இலவச உணவு திட்டம்: சென்னை ரேஸ்கிளப் ரூ. 4 லட்சம் வழங்கியது

சென்னை, ஜூலை, 8

சிறுவர்களின் இலவச மதிய உணவத் திட்டத்திற்சாக சென்னை 'ரேஸ் கிளப்' 4 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இந்த இலவச உணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து, இத்திட்டத்திற்கு பொதுஸ்தாபனங்கள் நிதி உதவி வழங்குமாறு கோரிக்கை விட்டிருந்தார்.

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி தமிழ் ஆசிரியர்கள் இத்திட்டத்திற்கு தமது 1 நாள் ஊதியத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

சேலத்தில் தி . பழனியப்பன் தலைமையில் நடந்த ஆசிரியர் சங்கக் கூடடத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (க)

# இஸ்ரேல் ஆக்கிரமிப்பு தேவையற்றது- பாலஸ்தீனியருக்கு இந்திரா அனுதாபம்

புதுடில்லி, ஜூலை 8

லெபனுன்மீது இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு தேவைப்படாத ஒன்று பலஸ்தீனியர்களுக்கு எங்கள் அனுதாபம் எப்போதும் போல் இருக்கும்.

பாரதபிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று நிருபர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமதி இந்திராகாந்தி மேலும் தெரிவிக்கையில் லெபனுன் யுத்தத்தில் காயமடைந்தவர்களுத்கு சிகிச்சையளிக்க ஏற்கனவே மருத்துவர் குழு ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாக கூறினுர்.

தமது அமெரிக்க விஜயத்தின்போது இந்தவிவகாரம் உட்பட பல்வேறுபிரச்னைகள் பற்றிபேச விருப்பதாகவும் அவர் கூறினுர்.

திருமதி இந்திராகாந்தி மேலும் கூறியதாவது:

எளிய பின்தங்கிய மக்களை பாரபட்சமாக நடத்துவதாக எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். இது ஜெர்மனியில் ஹிட்லர் நடத்திய பிரசாரம் போன்றதாகும். பின்தங்கிய மக்களை நாம் பாரபட்சமாக நடத்தவில்லை. அவர்களுக்கு எவ்வளவோ சலுகைகளையும் வசதிகளையும் அளித்துள்ளோம்.

பாரதிய ஜனதாகட்சியினர் விஞக இந்த பிரசாரத்தை மேறகொண்டு வருகின்றனர். இதனுல் எவ்விதநன்மையும் ஏற்படப்போவதில்லை. இது தவறுன பிரசாரமாகும்.

ஜனநாயகம், சோஷலிசம், மத சார்பற்ற நிலைபற்றி எதிர்க்கட்சியினர் பலவாறு பேசிவருகின்றனர். ஆனுல் எதிர்க்கட்சியினரிடம்ஒற்றுமையில்லை எனதுகட்சியை தோற்கடிக்கவேண்டுமென்பதற்காக மட்டுமே ஒற்றுமைப்பட்டுள்ளனர்.

பொதுத்தேர்தலிலும் பார்க்க இடைத்தேர்தல்களில் எனது கட்சிக்கு மோசமான நிலைமை ஏதும் ஏற்படவில்லை. மேற்குவங்காளம், கேரளத்தில், கூடியவெற்றி கிடைத்துள்ளது

ராஷ்ரபதி தேர்தலில் போட்டியிடும் ஜெயில் சிங்பழம்பெரும் விடுதலை வீரர் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்திருக்கிறுர்.

கர்நாடகத்தில் எனது கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். இச்சம்பவத்தை எதிர் கட்சியினர்பெரிதுபடுத்துகின்றனர்.

20அம்சத்திட்டத்தைசெயல்படுத்தி நாட்டை முன்னேற்றி, மக்களை நல்லநிலைக்குக் கொண்டுவர கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் உதவ வேண்டும்

நிலச்சீர்திருத்தம், விவசாயிகள் முன்னேற்றம் கருதி பல திட்டங்களை எமது அரசு நிறைவேற்றியுள்ளது. (க)

## அமெரிக்க ரசாயன ஆயுதம் லெபனுனில் உபயோகம்?

பெய்ரூத், ஜூலை 8

''இஸ்ரேலின் படையெடுப்பின் காரணமாக லெபனுனின் தலைநகரான பெய்ரூத்தில் ஏறத்தாழ 15,0 0 பே வரை கொல்லப்பட்டனர். 50,000 பேர் காயமடைந்துள்ளனர். 120 000 பேர் வீடுவாசல்களை இழந்து அகதிகளாயுள்ளனர் என்று லெபனுன் பிரதமர் சாபீத்வஸான் தெரிவித்துள்ளார்.

''லெபனுன் மக்கள் மீது தொடர்ந்து ஆக்கிரமிப்பினை மேற்கொண்டுவரும் இஸ்ரேல்; அமெரிக்கா கொடுத்த வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களை மட்டுமல்லாது, ''நரம்பு, வாயு'' ஆயுதம் உட்பட ரசாயன ஆயுதங்களையும் பெருமளவில் இங்கு பயன்படுத்திவருறது என்றும் அவர் கூறினுர்.

''லெபனுனில் நடைபெறும் இக்கொடிய செயல்களை மூடிமறைக்கும் முயற்கியாகவே ஆப்கானிஸ்தானிலும் லாவோஸிலும், சம்புச்சியாவிலும் சோவியத்யூனியன நச்சாயுதங்களைப் பயன்படுத்தியது சம்பந்தப்பட்ட தகவல்களை விசாரிக்க ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும் என்று ஐ நா. பொதுச்சபையின் விசேஷ கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி குறிப்பிட்ளார்.

''அதேவேளையில் சோவியத் யூனியன் என்றுமே, எந்த இடத்திலுமே ரசாயன ஆயுதங்களையோ அன்றி நச்சாயுதங்களையோ பாவித்ததில்லை. பிறருக்கும் விநியோகித்ததில்லை'' என்று கூறிய சோவியத் பிரதிநிதி இத்தகைய ஆயுதங்கள் உற்பத்திசெய்வதையும், அபிவிருத்திசெய்வதையும் தடைசெய்யும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க வருமாறு இடையருது வலியுறுத்திவருவதும் சோவியத் யூனியன்தான் என்றும் குறிப்பிட்டார்.

### இராமநாதபுரத்தில் கோஷ்டி மோதல்;

# இருவர்பலி; ஐவருக்கு காயம் சிறுவன் கடத்தப்பட்டான்

## ராஜபாளையத்தில் கூட்டம் ஊர்வலங்களுக்கு தடை!

சென்னை, ஜூலை, 8

இராமநாதடர மாவட்டத்திலுள்ள சேப்பூரில் ஏற்பட்ட கலவரத்தினுல் 2 பேர் பலியானுர்கள். 5 பேர் படுசாயம் அடைந்தனர். அரிவாள் வெட்டுக்கு இலக்கான ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ராஜபாளையம் பகுதியில் பொதுக்கூட்டம், ஊர்வலம் நடத்தக்கூடாதெனப் பொலிஸார் தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

மோதலில் ஈடுபட்ட இரு பிரிவினரையும் கொண்ட சமாதானமாநாடு ஒன்றைநடாத்துவதற்கான ஏற்பாட்டைப் பொலிஸார் செய்துவருகின்றனர்

இச்சம்பவங்களின் போது காணுமல் போன 2 சிறுவர்களில் ஒருவர் கண்டுபிடிக்கப்படவில்லை. இச்சிறுவன் கடத்தப்பட்டிருக்சுலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தானமும், உயர் பொலிஸ் அதிகாரிகளும் சம்பவம் நடந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

மற்றக் கிராமங்களுக்கு வன்முறைபரவாமல்இருககு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். [க]

### பீகார் சட்டசபை:

## வெளியேற்றப்பட்ட உறுப்பினர் மௌன ஊர்வலம்!

புதுடில்லி, ஜூலை 8

பீகார் சட்டசபையிலிருந்து வெளியேற்றப்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று ராஜ்பவனுக்கு மௌன ஊர்வலமொன்றை நடத்தி மகஜர் ஒன்றை கவர்னரிடம் கையளித்தனர்.

எதிர்க்கட்சியினர் சபையில் விடுத்த கோரிக்கைபற்றி விவாதம் நடத்தவேண்டும் என அந்த மகஜரில் தெரிவித்திருந்தனர்.

சம்பவங்கள் பற்றி தாமதமின்றி விவாதம் நடத்த அரசுக்கு ஆட்சேபனை இல்லை என பட்ஞவில் முதலமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் நடத்திய ஊர்வலத்தில் கட்சித்தலைவர்களும் கலந்து கொண்டனர். (க]

### சேபாலவிமானக் கடத்தல்:

# 6 இத்தாலிய சட்ட அறிஞர் இலங்கை செல்வார்கள்!

லண்டன், ஜூலை, 8

இத்தாலியைச் சேர்ந்த 6 சட்ட அறிஞர்கள் குழு ஒன்று சேபால விமானக் கடத்தல் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இலங்கை செல்ல விருக்கிறுர்கள்.

சேபாலாவை ஒப்படைக்குமாறு இத்தாலிய அரசு இலங்கையிடம் கோரியுள்ளது

சம்பந்தப்பட்ட ஆவணங்களுடனும், மற்றும் விபரங்களுடனும் இக்குழுவினர் செல்வார்கள்.

இதேசமயம் இலங்கை உயர் நீதிமன்றத்தில் இத்தாலிய தூதரகம் சேபாலா தொடர்பான மனுவொன்றைத் தாக்கல் செய்யவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

விமானக் கடத்தலுக்கு 4 இத்தாலியர் உதவியதாக, சேபாலா தெரிவித்திருப்பதால் அவர்கள் பற்றிய விபரங்களையும், இத்தாலிய சட்ட அறிஞர்கள் அறிவார்கள் எனக் கூறப்படுகிறது. (க)

## வேலைநிறுத்தம் செய்த தொழிலாளருக்கு 650 ரூபா வழங்க முடிவு

புதுடில்லி, ஜூலை 8

பம்பாய் ஆலைகளில், 6 மாத காலமாக நடைபெற்றுவரும் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை நிர்வாகம் எடுத்துள்ளது.

கணிசமான அளவு தொழிலாளர் வேலைக்கு திரும்பும்பட்சத்தில் முற்பணமாக 650 ரூபா வழங்க நிர்வாகத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

6 மாதத்திற்குப் பின் இப்

[6ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

பொருள் மிப்படைத்திருக்கவிரும்புபவனே
உலோபம் என்னும் பாபத்தைப் பெருக்குகிறான்.
— அருள்விருந்து

# நமது நோக்கு

## "வருந்தி அழைத்தாலும் வாராத வாரா"

மூதாட்டி ஔவையாரின் நீதி நூல்களில் ஒன்றாகிய 'நல்வழி'யில் வரும் பாட்டின் அடியே இத்தலையங்கம்.

பாட்டு இது;

''வருந்தியழைத்தாலும்
வாராத வாரா பொருந்து
வனபோமினென்றாற்
போகா இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக
நெடுந்தூரந்தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர்
தொழில்''

'கடவுளும் கத்தரிக்காயும்' ''ஔவையாரும் ஆட்டுக்குட்டியும்'' என்று கிண்டல் செய்து நவீன விஞ்ஞான, பொருளாதார' அரசியல் ஆய்வுகளில் தலையை உடைக்கும் அறிவாளிகளுக்கு ஒரு 'டோஸ்' நல்வழி நல்ல 'டொனிக்' ஆகும்; இன்றைய மாணவர்கள் படிககும் பாக்கியமற்ற நூல்களில் இதுவும் ஒன்று.

இன்றைய மாந்தர் தொழில் துஞ்சுவதாகக் காணப்படுதலால் ஏன் அவ்வாறு நிழவேண்டுமென்பதை மூதாட்டி மிக இலகுவாக விளக்குகிறார்.

நன்மை செய்தால் நன்மை; தீமை செய்தால் தீமை; வங்கிக் கணக்குப் போன்று தவறில்லாத வரவு செலவு விபரத்தை வாழ்க்கை காட்டும் 'வங்குரோட்' நிலையை நாடி விட்டோமென்று கவலையுற்று வாழ்நாளை வீணாகப் போக்குதல் அறியாமை; புள்ளி விபரம் கவலைக்கிடமளிக்காது.

செயலின் விளைவிலிருந்து கோணல் வழிகளால் தப்பி விடலாமென்று நம்புவது மடமையில் மடமை.

நாட்டின் அமைச்சரவை அங்கீகரித்த அரசியல் அமைப்புத் திருத்தங்களை அவதானித்துப் படிப்பவருக்கு எமது தலையங்கம் நினைவுக்குவருவது நியாயமாகும்.

தேர்தல் முறையில் காணப்படும் திருத்தங்கள் இன்றைய ஆட்சி எவ்வாறு மீண்டும் பதவிக்கு வரலாமென்ற வழிகளைக் கொண்டிருக்கிறதென்பது வெள்ளிடைமலை.

ஜனதிபதி ஆட்சி முறையும் விகிதாசாரத்தேர்தல் முறையும் நன்மைகள் அற்றமுறையென்று நாம் நிராகரிக்கவில்லை. கட்சியில் வெற்றி பெறும் பலர் ஓய்வூதியமுடைய பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர்.

எந்தமுறையிலும் ஒரு குறிப்பிட்ட கட்சியின் அதிகார பலத்துக்கேற்றவாறு ஆளும் கட்சியின் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டால் அந்த நோக்கு நன்மை பயக்காது.

நான்கு வருட ஜனதிபதி ஆட்சியில் திட்டங்கள் தாமதமின்றி செயற்பட்டிருந்ததை நாம் ஒப்புக்கொள்கின்றோம். ஆனால் திட்டங்கள் எத்தகையன? பாராளுமன்ற ஆலோசனைகள், விவாதங்கள் கருத்துப்பரிமாறல்களின் தெளிந்த தெளிவா? இல்லவே இல்லை.

எதிர்க்கட்சி- எதிர்க்கட்சிகளின் கூட்டாலோசனை- முற்றாக மடிந்துவிட்டது. ஆளுங்கட்சியின் ஆங்காரம் தவிர்க்கும் சக்தி எதுவுமே இல்லை.

அரசுக்குப் பலம் தேவையாயின் அங்கத்தவர்கள் கட்சி மாறலாம்; அரசுக்கு ஆபத்தென்றால் அது சட்ட விரோதமாக்கப்படலாம், இன்றைய திருத்தத்தில் ஆட்சிக்கு வலிமையூட்ட, அங்கத்தவர்கள் கட்சிமாறுதல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது; ஜனதிபதியின் தேர்தல் பற்றியும், அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் பற்றியும் குறிப்பிடும் திருத்தங்கள் இன்றைய ஆட்சி எவ்விதத்திலும் தொடரவேண்டுமென்ற நோக்கம்மிளிர்கின்றது.

1956ல் அமரர் பண்டாரநாயக்கா பிரதமராக வருவதற்கு-அவருடைய கட்சி பலம் பெறாத காலத்தில்- தம்முடைய ஆளுமையால் மக்கள் மனதைக் கவர்ந்திருந்தார்- ''சிங்களம் மட்டும்'' என்ற மயக்க மந்திரம் வேலைசெய்யுமென்று அவர் செயற்பட்ட போது ஐ. தே. கட்சி ''அதற்கு நாம் முந்தி நிற்கிறோம்'' என்று ஓலமிட்டது; கிடைத்தது படுதோல்வி.

சட்டங்களாலும், சந்தர்ப்பத்துக்கேற்ற சட்டமாற்றங்களாலும அதிகார காலத்தில் நினைத்தபடி ஆட்சி செய்யலாம்.

மக்கள் அபிப்பிராயம் திரட்டும் காலத்தில் தேர்தல் உபாயங்கள் -''திருக்கீசுகள்''-கடலை ஞானங்கள் மரணதானங்கள்-இவற்றில் எதுவும் வெற்றிதராதென்பது வரலாற்றின்விளக்கம்.

தோல்வி அதிர்ச்சியாகவும் இருக்கும். செய்தவினையிருக்க, வேறெவரையும் நோதல் வீண் என்று முகாரி ராகம் பாடுதல் சாதாரணம்.

எனவே மூதாட்டியின் பாட்டு விவாக விடயங்களிலும், வியாபார ஒப்பந்தங்களிலும், தனியார் விற்பனவு கொள்வனவிலும்தான் பாடப்படும் பாட்டல்ல.

அரசியல் விவகாரங்கள், ஆன்மீகத்தோடு தொடர்பு கொண்ட ஆழமானகாரியங்கள்; ''பயங்கரவாதத்தை எந்த வகையிலும் ஒழித்துக் கட்டுவோம்; பெரும்பான்மையரின் சுகபோகங்களுக்கு உத்தரவாதம் கொடுப்போம்; இனஅடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியும் வேலைவாய்ப்பும் வழங்குவோம்'' என்ற ஆவேசப் பேச்சுக்கள், ஆசை வார்த்தைகள், கடந்தகால 'வினைகளுக்கு' மாறாகவிருந்தால், வருந்தி அழைத்தாலும் இவை வாரா.

பெற்றோர் தாமும் நியாயமற்ற முறையில் தடுக்க முயன்றவிவாகங்கள் இனிது நிறைவேறி சிறப்பான வாழ்வில் முடிவதை நாம் தினசரி காண்கின்றோம். 'பொருந்துவன போமினென்றாற்போகா' என்று மூதாட்டிக்கு வணக்கம் செலுத்துகின்றோம்.

வெற்றியில் செருக்கின்றி கடமைகளைச் சரிவரச்செய்தால் 'தலையெழுத்து' தவறுக்கு இடமளிக்காது.

### யாழ். லயன்ஸ் கழகம்

# கைதடி முதியோர் இல்லத்திற்கு தொலைக்காட்சிப்பெட்டி அன்பளிப்பு

## நாளை சுகாதாரவார முதியோர் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

''தேசியசுகாதாரவாரத்தையும் முதியோர் ஆண்டுவிழாவையும் ஒட்டி, கைதடி முதியோர் இல்லமான சாந்திநிலையத்திற்கு யாழ் லயன்ஸ்கழகத்தினர் தொலைக்காட்சி பெட்டியொன்றை அன்பளிப்பு செய்யவிருக்கின்றனர்''

இவ்விழாவையொட்டி கைதடி முதியோர் இல்ல அதிபர் திரு. எம். மதியாஸ் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

1982-ம் ஆண்டை முதியோர் நலன்பேணும் ஆண்டாக கருதுமாறு உலக சுகாதார தாபனம் சகல அங்கத்தவ நாடுகளையும் கேட்டுள்ளது. எனவே இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் சுகாதாரவாரத்தில் முதியோரை மகிழ்ச்சியாக வாழ வைப்போம் என்ற அடிப்படையில் மக்களுக்கு சுகாதாரக் கல்வி போதிக்கப்படுகின்றது.

முதுமை எல்லோருக்கும் வருவது இயற்கையே முதியோரைப் பேணல், மரியாதை கொடுத்தல் முன்வைத்தல், தனிமை இல்லா வாழ்வளித்தல், அவர்களின் போசாக்கு போன்ற விடயங்களில் எல்லோரும் அதிகளவு அக்கறை எடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்நோக்குடன் ஜுலை 5-ம் திகதி தொடக்கம் ஜுலை 11-ம் திகதிவரை சுகாதார வாரம் கொண்டாடப்படுகின்றது. கைதடியில் உள்ள அரசாங்க முதியோர் இல்லத்தில் (சாந்தி நிலையம்) 10- தேதி சுகாதாரவிழாவுடன் இணைந்த முதியோர் ஆண்டுவிழா தனித்தன்மை கொண்டதாக மிகச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவ்விழாவில் சிறப்புவிருந்தினராக யாழ். அரசாங்க அதிபர், யாழ். சுகாதார அத்தியட்சகர் டாக்டர் கே. மாணிக்கம் யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஜே. எஸ். டேவிட், சுகாதார வைத்திய அதிகாரி (சாவகச்சேரி) டாக்டர் கே. நடராசா ஆகியோர் பங்குபற்றுவது குறிபிடத்தக்கது.

கலைநிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. மேலும் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பாட்டுப்போட்டிகள், மாணவர்களின்நாடகப்போட்டிகள். தொண்டர் இயக்கங்களினதும் மாதர் சங்கங்களினதும் நாடகங்களும் இடம்பெறும் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு டாக்டர் திருமதி ஜி. பொன்னம்பலம் அவர்கள் பரிசில்கள் வழங்குவார்.

### பாரதி பக்திப்பாடல் - 6

# பாரதியார் ஒரு கர்மயோகி

பாரதியாரை ஒரு கர்மயோகி என்றே கூறலாம். பகவத்கீதை மொழிபெயர்ப்புக்கு அவர் எழுதிய முகவுரையில் இந்தக் கொள்கை பலவிடங்களிலே உறுதிப்படுத்தப்படுகிறது. ''கடவுள் கர்மயோகிகளிற் சிறந்தவன். அவன் ஜீவாத்மாவிற்கு இடைவிடாத தொழிலை விதித்திருக்கிறான்'' என்று ஓர் இடத்தில் கூறுகிறார். ''உள்ளத்துறவு தான் செய்தற்குரியது. மனைத்துறவு செய்ய வொண்ணாத தொரு பாவம்'' என மற்றோர் இடத்தில் கூறுகிறார்.

பாரதியாரின் இந்தக் கொள்கை அவரது பக்திப் பாடல்களிலும் பிரதிபலிப்பதை காண்கிறோம்.

''கர்ம யோக மொன்றே
உலகில்
காக்கும் என்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும்- இங்கே
தவற லென்ப தின்றி''

என்ற பாடல் இதற்கோர் சான்றாகும்

உலகத்தில்செய்யும்தொழில் சிறக்க பொருள் வேண்டும். கல்வியும் ஞானமும் வேண்டும். தைரியமும் வீரமும்வேண்டும். எனவே கர்ம யோகியாகிய பாரதியார் இவற்றின் அதி தெய்வமாகிய இலக்குமி சரஸ்வதி, காளி ஆகிய தெய்வங்களில் காதல் கொண்டு அவர்கள் புகழ் பாடியது ஆச்சரியமல்ல.

''பொருளிலார்க் கின்பமில்லை புண்ணியமில்லை என்றும் மருவிய கீர்த்தியில்லை'' என்பது ஒரு பழைய பாடலின் அடிகள். இந்த கருத்தை பாரதியாரின் பாட்டிலும் காண்கிறோம்.

''உன்னை யன்றி இன்ப
முண்டோ
உலகமிசை வேறே
பொன்னை வடிவென்
றுடையாய்
புத்தமுதே திருவே''

பாரதியார் வழிபாட்டிலே காமிய வழிபாட்டினையே நாம் காண்கிறோம். ஞானிகள் அதனைத் தீதென்பர். காமிய வழிபாடென்பது ஒன்றை விரும்பி வழிபடுதல் பாரதியாரின் வழிபாடு தன் சொந்த நலத்திற்கான வழிபாடல்ல. தன் நாட்டு மக்களுக்காய வழிபாடு. இலக்குமியின் அருள் தனக்குக் கிடைத்தால் என்ன செய்வார், அவர் கூறும்பாடல் அவர் உள்ளத்தை நன்கு காட்டுகிறது

''செல்வ மெட்டு மெய்தி-
நின்னு
செம்மை யேறி வாழ்வேன்
இல்லை யென்ற கொடுமை-
உலகில்
இல்லையாக வைப்பேன்''

செல்வம் அடைந்தால்தான் வாழ்வது மாத்திரமல்ல உலகத்தையே வாழவைக்கும் உத்தம குணத்தையும் இங்கு காண்கின்றோம். கலைமகள் வணக்கத்திலும் இந்தப்பொது நோக்கை, நாடெங்கும்வாழக் கேடொன்றும் இல்லை என்னும் கொள்கையைக் காண்கின்றோம்.

வீடுதோறும் கலையின்விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு
பள்ளி
நாடு முற்றிலும் உள்ள ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல
பள்ளி
தேடு கல்வியி லாததோ
ரூரைக்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு அமுதமென்
அன்னை
கேண்மை கொள்ள
வழியிவை கண்டீர்

—தைரியம் தேகத்தின்உறுதி, அழகு, இவை யாவற்றிலும் மன உறுதி வேண்டும். அதற்கு ஞானம் வேண்டும். மனம் நல்லதையே நினைக்க வேண்டும். நல்லதையே. செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்நல்ல காரியங்களில்வெற்றி வேண்டும். இவற்றை யெல்லாந் தருபவள் காளி என்கிறார், சில இடத்தில் சிவசக்தியாகவும், ஞானத் திருமகளாகவும் வீரத் திருமகளாகவும் பாடுகிறார்.

என்ற னுள்ள வெளியில்-
ஞானத்
திரவி யேற வேண்டும்
குன்ற மொத்த தோளும்-
மேருக்
கோல மொத்த வடிவும்
நன்றை நாடு மனமும் -நீயெந்
நாளு மீதல் வேண்டும்.

- வ. குகசர்மா -

கீதையில் பகவான் கூறுகிறார். ''அறிவுத் தெளிவைத் தவற விடாதே பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு எது செய்தாலும் அது நல்லதாகவே முடியும்''

இந்த நிலைக்குப் பாரதியார் சுட்டிக் காட்டிய மூன்று தெய்வக் காதலும் வேண்டப்படுவதாகும்.

# றமழான் சிந்தனை

''தொழுகையை நிறைவேற்றி ஐக்காத்தையும் கொடுத்து விருந்து அளிக்கின்றவர் சொர்க்கம் புகுவார்.''

ஸஹர் முடிவு: 4-25
நோன்பு திறக்கும் நேரம்: 6-30
தொகுப்பு: சுல்பிக்ஹ-கௌது

# "சமுதாய மறுமலர்ச்சிக்கு நாடகங்கள் உதவவேண்டும்"

[அரியாலை]

''பலவித சமூகஅபிவிருத்திகளை மேற்கொண்டு உழைத்து வரும் எமது சமாசம் கிராம மட்டத்தில் இயங்கும் அங்கத்துவ கழககங்களிடையே பரந்த அளவில் நாடகப் போட்டியொன்றை நடாத்துவது வரவேற்கத்தக்கதாகும். நாடகங்கள் வெறும் நடிப்புதிறனை மட்டும் கொண்டதாக அமையாது சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய கருப்பொருளைக் கொண்டனவாக அமையவேண்டும்''

இவ்வாறு சமூக முன்னேற்றக்கழக சமாசத்தின் ஆதரவில் யாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடகவிழாவுக்குத் தலைமை வகித்த சமாசக் குழுத்தலைவர் திரு. க. ரவீந்திரதாஸ் பேசுயில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் ''தாழ்ந்தநிலையில் இருக்கும் சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படவேண்டுமானல் மக்கள் மனதில் நல்ல எண்ணங்கள் உதிக்கவேண்டும். நாடகங்கள் வெறும் நாடகங்களாக அமையாமல் உள்ளத்ல் மறுமர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய நல்ல கருத்துக்களைக் கொண்டனவாக அமைவதுடன் சமுதாயத்தில் புரையோடியிருக்கும் அறியாமைக்குச் சாவுமணியடிக்கும் புதிய கொள்கைகளைக் கொண்டதாகவும் அமைய வேண்டும்'' என்றார்

நாடகப் போட்டியில் அங்

(5-ம் பக்கம் பார்க்க)

# திருட்டுப்போன நகைகள்
## புதைத்துவைக்கப் பட்டிருந்தன!

[மன்னார்]

மன்னார் பட்டிதோட்டத்தைச் சேர்ந்த வீடொன்றில் களவுபோன நகைகள் தாராபுரத்தைச் சேர்ந்தவருடைய வீட்டின் பின்புறத்தில் புதைத்துவைக்கப் பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மன்னார் பட்டிதோட்டத்தைச் சேர்ந்த முருகேசு என்பவரது வீட்டில் பெட்டியில் பூட்டிவைக்கப் பட்டிருந்த 8075 ரூபா பெறுமதியான நகைகளும் துணிவகைகளும் திருடப்பட்டது. இத்திருட்டுச் சம்பவம்பற்றி மன்னார் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டு மன்னார் பொலிசார் விசாரணையிலீடுபட்டிருந்தபோது ரகசிய தகவல் ஒன்றினையடுத்து தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த வீடு ஒன்றிற்குச் சென்ற மன்னார் குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஆர். எஸ். ஜெயபாலன் வீட்டின்பின்புறத்தில் புதைத்து வைக்கப்பட்ட நகைகளைக் கைப்பறினர். வீட்டில்வைத்து அகமட்மவுசூன் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட அகமட்மவுசூன் மன்னார் நீதவான் மடவெல முன் ஆஜர்செய்யப்பட்ட போது தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டார் இதனையடுத்து தீர்ப்பு வழங்கும்வரை சந்தேநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# இன்று சிறப்புரை

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசவந்தனை முருமூர்த்தி கோவில் மண்டலாபிஷேகம் 36வது நாளான இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் சிறப்புரை நிகழ்த்துவார். (அ)

# சமுதாய....

[4–ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துவக் கழகங்களின் புதுயுகப்பூக்கள், மயானம் காத்த மன்னன், சண்டியன் தம்பிப்பிள்ளை, நீ சுமந்த பிள்ளை, துடுப்பிழந்த படகு, பலவீன உணர்வு, மலைகளை அகற்றிய மூடக்கிழவன், பணமா? பாசமா?, பாசத்தின் முடிவு, ஒரு சமுதாயம் விழி படைகிறது, சிலைகள், கஞ்சலன் ஆகிய நாடகங்கள் கலந்து கொண்டன.

# பொன்னாடை போர்த்திக் கௌரவம்

(சுழிபுரம்)

வழக்கம்பரை அம்மன்துதி நூல் ஆசிரியர் திரு. சோ. க. வேலாயுதருக்கு வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். சபையினர் சார்பாக உற்சவகால பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ந.சோமஸ்கந்த பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார்.

இவ்வைபவம் சமயப்பிரசாரகர் ஆசிரியர் நடராசா தலைமையில் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.





அருந்துங்கள்
தெம்பூட்டும் மதுரமான
ஓரேஞ் பார்லி
நெக்டோ
தரமுயர்ந்த இரு யானைமார்க் குளிர் பானங்கள்
CCS
வ. மா. விலை 2/45
எலிஃபன்ட் ஹவுஸ்


# மூலவளங்களை பயன்படுத்ததிட்டம்

(பண்டத்தரிப்பு)

கிராமியமட்டத்தில் மூலவளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்திவேலைகள் மேற்கொள்வதுபற்றி ஆராயுமுகமாக பண்டத்தரிப்பு கிராமோதயசபையின் விசேட பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சபைத் தலைவர் திருமதி பேர்ளி அதனாசியார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளா திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

# பதவி உயர்வு

[சங்கானை]

யாழ். மக்கள் வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர் திரு. முத்துத்தம்பி கணேசசுந்தரம் கொழும்பு மக்கள் வங்கிச் செயலகத்திற்கு மாற்றலாகி முதல்தர தலைமைப் பரிசோதகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

# பட்டமளித்துக் கௌரவம்

[யாழ்ப்பாணம்]

மிருதங்க வித்துவான் கிருஷ்ணசாமி சிவகுருநாதன் திருகோணமலை உப்புவெளியில் அமைந்திருக்கும் சோலையடி வயிரவர் ஆலயத்தில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ ராஜகந்த கணேசமணிக் குருக்களால் ஆசிரியமணி என்றபட்டமளித்து, பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# சிரமதான முறையில் கேணி அமைப்பு

[மண்டைதீவு]

மண்டைதீவு விவசாய முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் இப்பகுதி கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக கேணி ஒன்று சிரமதான முறையில் வெட்டப்பட்டது.

இச்சிரமதான வைபவத்துக்கு விவசாய முன்னேற்றக் கழக உப தலைவர் திரு. வெ. அமிர்தலிங்கம் வகித்தார்.

இப்பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்த பலர் இச்சிரமதானத்தில் கலந்து கொண்டார்கள்.

# சுகாதார விழா

[சுழிபுரம்]

சுழிபுரம் பகுதி சுகாதாரப் பரிசோதகர் நடாத்தும் சுகாதார விழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக தொழிலதிபர் க. கனகராசா கலந்து கொள்ளவுள்ளார்.

# பொருளாதாரத்தில் தன்னிறைவுபெற வழி

(சாவகச்சேரி)

படித்த இளைஞர், யுவதிகள் எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகம் கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. இவ்விதமான கழகங்களை அமைத்துக் கூட்டாக இயங்குவதன் மூலம் பொருளாதாரத்தில் தன்நிறைவு காணமுடியும்''

சரசாலை தேசிய இளைஞர் கழக அங்குரார்ப்பணவிழாவின் தலைமையுரையில் சாவகச்சேரி தேசிய இளைஞர் சேவை அதிகாரி செல்வி விமலேஸ்வரி வல்லிபுரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சரசாலை வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடந்த மேற்படி வைபவத்தில் சரசாலை கிராமோதயசபைத் தலைவர் திரு. த. சபாநாயகம் மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. த. காசிநாதன், சமூகசேவையாளர் திரு. ந. பரமசாமி ஆகியோர் உட்படப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

# "தமிழினத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது!"

(யாழ்ப்பாணம்)

"தமிழினத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய கட்டாயத்திற்கு இன்று தமிழ்மக்கள் வந்துள்ளனர். நாம் எங்கே போகிறோமென்று தெரியாத நிலையில் இன்று தமிழினம் வழிநடத்தப்படுகிறது. எனவே எமது இனத்திலுள்ள அறிவாளிகள், சிந்தனையாளர்கள், குறிப்பாக இளைஞர்கள் பக்கசார்போ, கட்சிச் சார்போ, வேறு எந்த சுயநலமோ இன்றி நடுநிலையில் நின்று நிதானமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது''.

இவ்வாறு அச்சுவேலி தோப்பு வாலிப முன்னேற்றக் கழகம், தோப்பு சனசமூகநிலையம் இணைந்து நடத்திய வெள்ளிவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் சிறப்புச் சொற்பொழிவாளராக கலந்து கொண்டு உரையாற்றிய தமிழர் சுயாட்சிக்கழகதுணைச்செயலாளர் திரு, ந. சிறிகாந்தா தெரிவித்தார்.

தோப்பு சனசமூகநிலைய முன்றலில் திரு. வ.செல்லையா தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் ''இங்கிருந்து எங்கே?' என்ற தலைப்பின் கீழ் திரு. சிறிகாந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இங்கிருந்து நாம் எங்கே போகிறோம் என்று தெரியாத நிலை எமக்கு இன்று ஏற்பட்டுள்ளது. இந்த இடத்திலிருந்து புறப்பட்டால் கூட நாம் வீட்டுக்குப் போகிறோமா அல்லது ஆஸ்பத்திரிக்குப் போகிறோமா வேறு எங்கு போகிறோமா என்று எம்மால் கூறமுடியாது. இந்தநிலையில் தான் எமது இனத்தின் அரசியல் நிலையும் வழி நடத்தலும் செல்கின்றது இந்த நிலையிலிருந்து நம் இனம் விடுபட நாம் நன்றாக சிந்தித்துச் செயல்படவேண்டியவர்களாகியுள்ளோம். நிதானமில்லாமல் பொறுப்புணர்ச்சியில்லாமல் கடமைகளை மறந்து தமிழ்த்தலைகள் வழிமாறிச் செல்வதை நிறுத்தி நேரான வழியில் செல்ல வைக்க எம்மினம் விழிப்படைய வேண்டிய கட்டம் இது. தமிழினம் சுயாட்சி உரிமையுடன் தன்னைத்தான் ஆண்டகாலம் தொடக்கம் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் ஆளப்பட்ட காலம் இதன்பின் இந்த நாட்டில் நாம் இரண்டாந்தர பிரசைகளாக்கப்பட்ட காலம் இலங்கை வாழ் தமிழ் மக்கள் குடியுரிமை, வாக்குரிமைகள் இழந்த காலகட்டம் தொடர்ந்து இன்றைய காலம் வரை தமிழ் மக்கள் குறிப்பாக எமது எதிர்காலச் சந்ததியான இளைஞர்கள் எமது வரலாற்றைத் திரும்பிப் பார்த்துச் செயல்பட வேண்டியுள்ளது.

முதல்நாள் நிகழ்ச்சிக்கு கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரமும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் ப. சந்திரசேகரமும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இரண்டு தினங்களும் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சிகள் இறுதி நாளன்று இடம்பெற்றன. [வண்-நிரு]

# மருந்து தட்டுப்பாடு நீங்கியது

(மண்டைதீவு)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை வேலணை உப அலுவலகத்துக்கு கீழ் இயங்கு வரும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் ஏற்பட்டு வந்த மருந்து தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

கடந்த பல மாதங்களாக மேற்படி வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாமல் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது.

நோயாளர்களுக்கு தேவையான மருந்துகள் வந்து சேர்ந்துள்ளதாக ஆயுள்வேத வைத்தியர் தெரிவித்தார்.

# மாவட்டசபைத் தலைவர் உறுதி

அகில இலங்கைத் தற்காலிக ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் கட்டுவனில் நடைபெற்றது. அங்கு கலந்துகொண்ட மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா ஒவ்வொருவருடனும் தனித்தனி கலந்துரையாடினர், பின்பு சகல ஆசிரியர்களின் விபரத்தையும் எடுத்துத் தரும்படியும், தகுதியானவர்கள் அத்தனை பேரையும் நிரந்தரமாக்குப்படியும் ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்வதாக உறுதியளித்தார். [மா]

# இன்று நடக்கும் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

இன்று கொக்குவில் கிழக்கு ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நடைபெறுகின்றது. இன்று பி. ப. 4 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பிக்கும் பொங்கல் விழாவில் இரவு 7 மணிக்கு வைரவப் பெருமானின் வீதி உலாவும் அதனையடுத்து பொங்கலும் நடைபெறும். (உ)

# தென்னங்கன்றுகள் வழங்கப்படும்

(பரந்தன்)

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள தோட்டச் செய்கையாளர்கள் போதியளவு தென்னங்கன்றுகள் பெற்றுப் பயிரிட கிளிநொச்சியிலுள்ள தெங்கு அபிவிருத்திச்சபை அலுவலகஉத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுருநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார். இக்கன்றுகள் கிளிநொச்சி தென்னை நாற்றுமேடையிலிருந்து மூன்று ரூபா வீதம் வழங்கப்படும்.

# சுகாதார விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் சுகாதாரவிழா கொண்டாடப்படவுள்ளது. இம்மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ள இவ்விழாவில்யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகர் டாக்டர் கே. மாணிக்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்குக் குடிநீர்வசதியை அமைத்துக் கொடுத்த வர்த்தகர் நா. சண்முகம் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளார்.

இவ்விழாவைப் புங்குடுதீவு சுகாதாரப் பரிசோதகரும், புங்குடுதீவு சுகாதார அபிவிருத்திசபையும் இணைந்து ஒழுங்குபடுத்தியுள்ளன. (உ)

# கருத்தரங்கு

(மண்டைதீவு)

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 21-ந்திகதி மண்டைதீவு கிராமோதய சபைத் தலைவர் திரு நா இராசலிங்கம் தலைமையில் மண்டைதீவு கிராமசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.



கோண்டாவில் – இணுவில் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் நான்கு லட்சம் ரூபா செலவில், தாவடிச் சந்தியில் புதிய மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டி முடித்துள்ளது. இக்கட்டிடத்தை உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் திறந்துவைப்பதையும், மேற்படி சங்கப் பொது முகாமையாளர் திரு. அ. செல்வராசா, பனம்பொருள் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. க நடராசா, மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதையும், இரண்டாவது படத்தில், மேற்படி சங்கத்தலைவர் திரு க. செல்லத்துரை, கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை ஆகியோர் குத்துவிளக்கேற்றுவதையும் இப்படத்திற் காணலாம்.

## இராணுவக் குறைப்பு ஆலோசனை

லண்டன் ஜுலை. 8

மத்திய ஐரோப்பாவிலிருந்து இராணுவததை பெருமளவில் குறைப்பதுபற்றிய ஆலோசனைகளை வியட்னுமில் நடக்கும் மாநாட்டில் மேற்கு நாடுகள் சமர்ப்பிக்கவுள்ளன.

இம்மாநாட்டில் 19 நாடுகள் கலந்துகொள்ளும் இராணுவப் படைகளை 9லட்சமாகக்குறைக்கவும், தரைப்படைகளை கிழக்கு நாடுகளிலும், மேற்கு நாடுகளில் 7லட்சமாகக் குறைக்கவும் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. (க)

## துருப்புக்கள் வாபஸ் பெறப்படும்

லண்டன் ஜுலை 8

கம்பூச்சிய விவகாரத்தில் கணிசமான அளவு வியட்னும் துருப்புக்கள் வாபஸ் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

தாய்லந்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படைவிலகினால், மேலும் துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் என வியட்னும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

கம்பூச்சியாவிலிருந்து எவ்வளவு துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. (க)

## சிறுபான்மையினர் மொழியை பயிலலாம்

சென்னை ஜுலை 8

கர்நாடகத்தில் சிறுபான்மை இனத்தவரின் பிள்ளைகள் ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் தங்கள் மொழியைப் படிக்கலாம் என கர்நாடக முதலமைச்சர் திரு. குண்டுராவ் அறிவித்துள்ளார்.

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் சிறுபான்மையினரின் கல்வி பற்றி எழுப்பியபிரச்னைகளுக்கு பதலளிக்கையிலேயே திரு. குண்டுராவ் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார். [க]

## தொழிலாளர்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் சம்பளத்தில் மாதா மாதம் கழிக்கப்படும் என்றும் ஆலையில் வேலை ஆரம்பிக்கப்பட்டு 15 நாட்களின் பின் இந்த முற்பணம் வழங்கப்படும் என்றும் ஆலைநிர்வாகம் அறிவித்துள்ளது

மாற்றுத் தொழிலாளருக்கும் இந்த முற்பணம் அளிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. [க]

## சீட்டிழுப்பு முடிவுகள்

(கொழும்பு)

891–வது இலக்க தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு;

முதலாவது பரிசு
10 M 0747
ரூ. 1,00,000

இரண்டாவது பரிசு
05 Y 0705
ரூ. 40,000

மூன்றுவது பரிசு
22 S 0463
ரூ. 10,000

தலா ரூபா 4?8/75 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 09 A 0765 | 12 A 0791 |
| 20 A 0322 | 06 B 0255 |
| 06 B 0992 | 08 B 0148 |
| 08 B 0898 | 18 B 0796 |
| 01 C 0217 | 18 C 0149 |
| 20 C 0429 | 03 D 0259 |
| 04 D 0034 | 06 D 0224 |
| 06 D 0397 | 1? D 0169 |
| 20 D 0019 | 01 E 0191 |
| 01 E 0651 | 08 E 0039 |
| 04 F 0419 | 22 F 0729 |
| 03 G 0006 | 08 G 0772 |
| 19 G 0912 | 21 G 0353 |
| 06 H 0740 | 07 H 0411 |
| 08 H 0258 | 15 H 0404 |
| 18 H 0555 | 22 H 0456 |
| 05 J 0599 | 13 J 0868 |
| 02 K 0156 | 03 K 0808 |
| 12 K 0772 | 16 K 0905 |
| 22 K 0339 | 09 L 0695 |
| 10 L 0894 | 18 L 0722 |
| 11 M 0323 | 12 M 0020 |
| 16 M 0321 | 03 N 0368 |
| 04 N 0636 | 17 N 0818 |

| | |
|---|---|
| 05 O 0136 | 15 O 0753 |
| 16 O 0864 | 19 O 0522 |
| 02 P 0305 | 11 P 0?33 |
| 12 P 0?94 | 16 P 0381 |
| 17 P 0140 | 19 P 0185 |
| 20 P 0 67 | 11 R 0701 |
| 17 R 0357 | 18 R 0500 |
| 08 S 0080 | 19 S 063 |
| 20 S 0417 | 02 T 0207 |
| 04 T 0756 | 06 T 0805 |
| 07 T 0852 | 09 T 0492 |
| 10 T 0119 | 14 T 0709 |
| 16 T 0466 | 20 T 0234 |
| 21 T 0323 | 02 U 0396 |
| 10 U 0194 | 14 U 0196 |
| 16 U 0005 | 16 U 0742 |
| 17 V 0734 | 05 W 0822 |
| 07 W 0176 | 12 W 0094 |
| 15 W 020? | 04 X 0079 |
| 05 X 0297 | 05 X 0398 |
| 05 X 0482 | 07 X 0213 |
| 05 Y 0193 | 06 Y 0458 |
| 07 Y 0851 | 09 Y 0071 |
| 10 Y 0442 | 11 Y 0872 |
| 15 Y 0010 | 20 Y 0435 |
| 11 Z 0272 | 15 Z 059? |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

துறைமுக

## தொழிலாளர் வேலை நிறுத்தம்

சென்னை ஜுலை 8

சென்னைத் துறைமுகத்தில் 7 நாட்களாக நடைபெற்று வரும் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளது.

துறைமுகத் தலைவர் திரு. செல்வராசன் துறைமுகத் தொழிலாளர் யூனியன் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார். [கு]

## சென். ஹென்றீஸ் கல்லூரி தினவிழா

(யாழ்ப்பாணம்)

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி தின விழா நாளை சனிக்கிழமை காலை நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் செய்துள்ளனர்.

கல்லூரி அதிபர் வண. அன்ன் இராசநாயகம் அடிகளார் உதவி அதிபர் வண. பஸ்ரியன் ஞானப்பிரகசம். வண. இ. மகேந்திரன் ஆகியோர் பங்குபற்றும் கூட்டுப்பலிபூசையுடன் விழா ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து சாரணர் அணிவகுப்புடன், கல்லூரிக் கொடி ஏற்றப்பட்டு, கல்லூரிக் கீதத்துடன், நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். மாலையில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். பெற்றோரும், பழைய மாணவர்களும் கலந்து கொள்வார்கள். க

## மத்திய அரசு உதவி

சென்னை. ஜுலை 8

மாநில அரசின் புதிய திட்டங்களுக்கு 48 சத விகிதத்தை மத்திய அரசு கடனுதவியாக வழங்கும். மிகுதிப் பணத்தை மாநில அரசே ஏற்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

## "சீவல் தொழிலாளரைத் தலைநிமிர்ந்து வாழச் செய்தவர் டாக்டர் என். எம்."

(சாவகச்சேரி)


தற்போது வடபகுதிகளிலேயுள்ள சீவல் தொழிலாளர்களின் நிலை போதியளவு உயர்ந்துவிட்டது தங்கள் உரிமைகளை இழந்து சமுதாயத்தினுல் புறக்கணிக்கப்பட்டு வந்த இச் சீவல் தொழிலாளர்கள், இன்று தலைநிமிர்ந்து வாழச்செய்தவர்காலஞ்சென்ற டாக்டர் என். எம். பெரேரா தான் என்பதை மறக்கமுடியாது''

தெங்குப்பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா வைபவம், கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினரும், பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவருமான திரு. சே. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு எம் நித்தியானந்தனின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''இன்று இந்த அரசாங்கம் பாகுபாடற்றமுறையில் சேவையாற்றிவருகிறது முன்னொருகாலத்தில் சிறுபான்மையினர் என ஒதுக்கப்பட்டவர்கள், இன்று சரிநிகர் சமானமாக சமூகத்தில் இடம் பெறுமளவிற்கு உயர்வடைந்துவிட்டார்கள். நாம் எங்கள் விவேகத்தினுலும் புத்திசாதுரியத்தாலும் விடாமுயற்சியாலும் முன்னேறிச்செல்ல வேண்டும். பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவராகப் பாகுபாடற்றமுறையில் யாவருக்கும் எல்லாவிடங்களிலும் இயலுமளவிற்கு தொண்டாற்றுவேன்''

விபத்து மரணமடைந்த மேற்படி சங்கத் தொழியான சாளிமுத்துவின்குடும்பத்திற்கு அன்பளிப்பாக 10,000 ரூபா கொண்ட காசோலையும் வழங்கப்பட்டது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை அங்கத்தவர் எஸ். நடேசு உட்பட மேலும் பலர் உரையாற்றினர்,



(கொககுவில)

சமூகத்தொண்டரான கொக்குவில் மேற்கைச்சேர்ந்த திரு. சி. சிவஞானரத்தினத்தின் (சின்னராசா) நினைவு தினம் நேற்ருகும். அமரர் சின்னராசா பொதுநலப்பணியில் முற்றுமுழுதாக ஈடுபட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். சிறந்த சைவத்தொண்டராக விளங்கிய இவர் சமய வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். மக்கள் தொண்டனுக விளங்கிய இவரின் சேவையை திருமலை எம். பி திரு சம்பந்தன், திருமலை மாவட்டசபைத் தலைவர் திரு. தங்கத்துரை, யாழ் முதல்வர் திரு ஆர். விசுவநாதன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர். அன்னுரின் ஆத்மா சாந்தியடைக.

## மௌனஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலய தர்மகத்தா சபைக் கூட்டம் திரு. த நீதிராஜா தலைமையில் நடைபெற்றபோது அண்மையில் காலமான தர்மகத்தா சபை உறுப்பினர் பீ. எஸ் சிவஞானரத்தினத்தின் மறைவு குறித்து இரு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னரது சேவையைப் பாரட்டி நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் தர்மகர்த்தா சபைச் செயலாளருமான திரு என் அருணசலம் உட்பட பலர் உரையாற்றினர்

திரு சிவஞானரத்தினத்தின் இடத்திக்கு திரு. த. கணேசபிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். [இ]


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்

297, யூனியன் பிளேஸ் கொழும்பு 2.

தொலைபேசி: 32941-5

Metropolitan

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனி-கமல்-ஸ்ரீதேவி
மூன்றுமுடிச்சு
[புதிய பிரதி]

## இன்று

[யாழ்பாணம்]

இணுவில் அ. மி. த. க. பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பெதுக்கூட்டம் இனறு வெள்ளிக கிழமை மாலை பாடசாலை அதிபர் திரு. செ.சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெற விருக்கின்றது. (மா)

வெஸ்லி தினசரி: 6- 5, 9-30 சனி, ஞாயிறு2-30
(மானிப்பாய்) கொழும்பில் 300 நாட்களாக ஓடிக்கொண்டிருக்கும் வெற்றிச்சித்திரம்
கமலஹாசன்
ஸ்ரீதேவி
முத்துராமன்
குரு (கலர்)

ராணி (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
சுருளிராஜன்
காசி யாத்திரை
From 10-7-82
AN UNMARRIED WOMAN

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
கடைசி வாரம்
* ரஜனிகாந் * சுஜாதா * விஜயன்
* கராத்தே மணி * ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 3-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
3-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை
(கலர்)

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

ரிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
இப்பொழுது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த பரபரப்பூட்டி



50-வது வெற்றித் தினமாக காட்சியளிக்கிறது
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின் மற்றுமோர் சாதனை! சிவாஜி, எம். ஜி. ஆர். நடிப்புகளை நினைவுபடுத்தும் கமலின் நடிப்பு!
கமலஹாசன் (இரட்டை வேடம்)
சுஜாதா, சுமன், அம்பிகா, தங்கவேலு.
—கலர்—
கடல் மீன்கள்

### வர்த்தலைவிளானில் நடைபெறும்

# இருநாள் விழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் 15-வது கிளை நிலையத்தின் வர்த்தலை விளான் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்ட ஆண்டு விழா நாளை சனிக்கிழமையும் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருக்கிறது. தகவல் கல்வித்திட்ட மண்டபத்தில் நடைபெறும் இவ்விழா நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

1-ம் நாள்-காலை 9 மணிக்கு தெ. ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்ட பதிய மண்டபத்தினை திறந்து வைப்பார். இவ்வைபவத்தில் திருமதி தங்சரத்தினம் தம்பித்துரை, திரு. சி. நவரத்தினம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவார்கள்.

காலை 10 மணிக்கு பொருட்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும். இதில் யாழ் கூ. ஆ. உ. ஆணையாளர், மில்க்வைற் அதிபர் திரு. திருமதி கனகராசா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்கள். பொருட்காட்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும். யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விவாதப் போட்டியும் இடம்பெறும்.

2-ம் நாள்-மாலை 5 மணிக்கு நிகள்ச்சிகள் ஆரம்பமாகும். இதற்கு திருவதி இ. செகரட்ணசிங்கம் தலைமை தாங்குவார் பிரதம விருந்தினர்களாக யாழ். சிரேஷ்ட கூ. ஆ. உ. ஆணையாளர் திரு. சு. ஜெயகாந்தன், வைத்திய கலாநிதி திருமதி கு. பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொள்ளுவார்கள். தெ. ப. நோ. கூ சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா, திருமதி. ஜீ. வை. வேலுப்பிள்ளை, யாழ். மாவட்ட ஸ்ரீ தே. கூ. சபை செயலாளா திரு சு. சிவசுப்பிரமணியம், ஆசிரியை திருமதி திவ்யராணி சிதம்பரநாதன், தெ. ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் திரு. சி. நவரத்தினம், வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

யாழ் கூ. ஆ. உ. ஆணையாளர் திரு, ச. ஞானப்பிரகாசம், தெ. ப. நோ. சங்கக் கல்வியதிகாரி செல்வி பா. ஆறுமுகம் ஆகியோர் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்துவார்கள்.

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, பரிசில் வழங்குதல், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

(உ)

## இடமாற்றம்

[மன்னார்]

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி செங்கலடி உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் அமிர்தலிங்கம் நியமிக்கப்படலாம்என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஃ ஃ ஃ

[மன்னார்]

மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பரந்தன் பாடசாலைக்கு குழாய்நீர் வசதி

[பரந்தன்]

பரந்தன் குமரபுரம் இந்து கனிஷ்ட வித்தியால மாணவ மாணவியர் தமது குடிநீர்த் தேவைக்கு பாடசாலைக்கு வெளியேயுள்ள கிராமசபைக் கிணற்றிற்கோ, அயலிலுள்ள தனியார் இல்லங்களுக்கோ செல்லவேண்டியதை உணர்ந்து அயலிலுள்ள கிராமசபைக் கிணற்றிலிருந்து குழாய் நீர் பெற வசதியாக கல்வி இலாகாவினால் மின்சார பம்புஒன்று வழஙகப்பட்டது. மேலும் இத்திட்டத்தை இயங்கச் செய்ய மின்சார வசதி அவசியமாதலால் இப்பாடசாலைக்கு மின்சாரவசதி ஏற்படுத்த கிளிநொச்சி எம். பி. திரு வீ. ஆனந்தசங்கரி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ரூபா 6,000/- ஒதுக்கியுள்ளார்.

### அமரர் மகேசன்:

## ஒரு முழுமையான கனவான்

பருத்தித்துறை நீதிபதி திரு. ே. எஸ். மகேசன் ஆடி மாதம் 4-ம் திகதி தமது ஐம்பதாவது வயதில் இயற்கை எய்தியமை அவரை நன்கு தெரிந்து மதிப்பளித்தவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஓர் அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரையும் உருவாக்கியுள்ளது.

அவரது அப்பழுக்கற்ற கடமையுணர்ச்சியும் வேலைப்பளுவும் அவரது மரணத்தைத் துரிதப்படுத்தியிருக்கவேண்டும். தனது மரணத்துக்கு முதல் நாளும் பயங்கரவாதத்துக்கு நெல்லியடியில் பலியான பருத்தித்துறைப் பொலிஸ் உத்தியோகத்தரின் மரண விசாரணையை நடத்தினூர்.

கம்பீரமான தோற்றமும் ஆளுமையும் கொண்ட அமரர் மகேசன் சட்டத்துறை மட்டுமன்றி அறிவியல் சார்ந்த துறைகளிலும் ஈடுபாடுகொண்டிருந்தார். நீதித்துறையில் மிகவுயர்ந்தசீரிய பாரம்பரியங்களைக் கைக்கொண்டு தொடர்ந்து நிலவச்செய்த அமரர் மகேசன் தனது முன்னிற்கும் கட்சிக்காரரின் நலவுரிமைகளைக் கருத்திற்கொண்டு அநேகமான வழக்குகளைச் சமாதானமாக்கித் தீர்ப்பளிக்கத் தவறவில்லை. எவ்வழக்கையும் நுண்ணியமுறையில் அணுகும் கண்ணேட்டம்படைத்த அமரர் மகேசன் சட்டத்தரணிகள் தங்கள் தரப்பு வழக்குகளை முன்வைத்து ஒரளவு விளக்கமளித்துக்கொண்டு போகும் போதே அவற்றின் சகல அம்சங்களையும் புரிந்துகொணடு விடுவார். தமது நீதிமன்றின் மாண்பையும் உயர்வையும் மனதிற்கொண்டு சட்டத்தரணிகளுடன் மதிப்புடனும் கட்சிக்காரர் மீது அனுதாப மனப்பாங்குடனும் நடந்து, அவர்களின் நன்மை கருதி வழக்குகளுக்கு விரைவான தீர்வு கண்டவர் அமரர் மகேசன்.

நீதித்துறையில் வள்ளுவன் அமைத்த வரம்புக்கமைய ''சமன் செய்து சீர் தூக்கும் கோல் போலமைந்தொருபால் கொடாது'' சான்றோனக விளங்கிய அமரர் மகேசன் சிறந்த எழுத்தாளனுகவிளங்கி தாம் படைத்த 'அந்தரத்தீவு' என்னும் நூலுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்ருர்.

தேசியஒற்றுமையைத் தாரக மந்திரமாகக் கொண்ட அமரர் மகேசன் ஒரு தேசாபிமானியாகவும் சிறந்த ஜனநாயகவாதியாகவும் வாழ்ந்து காட்டினூர். ஜனநாயகம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும்இயங்க வேண்டுமாயின் பத்திரிகையாளருக்குரிய முக்கியத்துவமும் ஆதரவும் அளிக்கவேண்டும் என்பது அவரது ஆய்ந்த முடிபு, பத்திரிகையாளருடன் தமது அனுபவங்களைப்பகிர்ந்து அவர் கலந்துரையாடுவதே ஒரு தனியின்பமாகும்.

ஒரு இந்து மதத்தவனுக்கு வேண்டிய சகல பண்புகளும் வாய்ந்த அமரர் மகேசன் அகில உலக இந்து பரிஷத்தின் பருத்தித்றுறைக் கிளைத் தலைவராகவும் செயலாற்றினுர் நீதிபதியென்ற முறையில் தமது உத்தியோகக் கடமைகளை ஆரம்பிக்கு முன் தினசரி பருத்தித்துறை நீதிமன்றுக்கு முன் அமைந்துள்ள ஆலயத்தின் காலைப் பூசையிற் கலந்துகொள்வார். சாதி வேற்றுமை போன்றவிடயங்களில் அவரது முற்போக்கான கருத்துக்களை ஏற்காதவர்கள் அவரைக் கண்டித்தாலும் அவர் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை

யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனுன அமரர் மகேசன் கட்டுப்பாடும் கண்ணியமும் ஒழுங்கும் எதையும் மனம்விட்டுப் பேசும் சால்பும் கொண்டவராகையால் அவர் பலரதுபாராட்டைப்பெற்ருர்.

அமரர் மகேசன் ஒரு முழுமையான மனிதன். ஒரு கனவான். ஒரு நீதிபதி. அப்பெருமகனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

வ. மகாலிங்கம்
நெல்லியடி,
கரவெட்டி,

## இலவச பிரசாதம்

[யாழ்ப்பாணம்]

தென் இந்தியாவில் இரு மாதகாலம் தலயாத்திரை மேற்கொண்டு 51 தலங்களைத் தரிசித்தபின் அகில இங்கைத் திருமுறை மன்ற இணைச்செயலாளர் திரு கா. இரகுநாதன் நாடுதிரும்பியுள்ளார்.

51 தலங்களின் விபூதி பிரசாதங்களை இலவசமாக பெற்றுக் கொள்ள நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள அகில இலங்கைத் திருமுறை மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க]

## புங்குடுதீவு சுகாதார. அ. சபை

[புங்குடுதீவு]

புங்குடுதீவு சுகாதார அபிவிருத்தி சபையின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவானுர்கள்:

தலைதர் திரு. ந.தர்மபாலன் உப தலைவர் திரு வீ. பேரம்பலம். செயலாளர் திரு. த. இரவிகுமாரன் உப செயலாளர் திரு. மு. கணேசலிங்கம் பொருளாளர்திரு கோ.சச்சிதானந்தன, 21 பேரைக்கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது.

[ம]

★ கடத்தல் முயற்சி சென்னை விமான நிலையத்தில் முறியடிப்பு

# ரூ.32 லட்சம் தங்கக் கட்டிகள் சிக்கியது!

சென்னை, ஜூலை. 8 சிங்கப்பூரிலிருந்து வந்த இரு பிரயாணிகளிடமிருந்து 16 லட்சத்து [இலங்கை நாணயப்படி 32 லட்சத்து 50,000 ரூபா] 19,400 ரூபா பெறுமதியான தங்க கட்டிகளை [பிஸ்கட்மாதிரி] சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

லட்சுமி, அப்துல்ரஹ்மான் ஆகிய இருவரும் இந்த தங்க பிஸ்கட்டுகளைக் கடத்திவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

லட்சுமியைச் சோதனையிட்ட போது முதலில் அவரிமிருந்து 3 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும், பின்னர் 11 தங்கபிஸ்கட்டுகள் அவரிடமிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அப்துல் ரஹ்மானிடமிருந்து ஒவ்வொன்றும் ஒரு கிலோ நிறையுடைய 6 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் சென்னை சுங்ககலக்டர் தெரிவித்தார்.

இத்தங்க பிஸ்கட்டுகள் லண்டனில் தயாரிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. [வெ]

## பிரெஞ்சு அரசு அதிகாரிகள் நாளை யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்]

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியும் பிரெஞ்சு அரசால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதியும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்துக்கு நாளை சனிக்கிழமை உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யவுள்ளனர்.

பிரெஞ்சு கல்வி, கலை, கலாசார அபிவிருத்திகளை மேற்கொள்வது சம்பந்தமாக இவர்கள் ஆலோசிக்கவுள்ளனர்.

யாழ். முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள பிரெஞ்சு நட்புறவுச்சங்கத்தில் நடைபெறவிருக்கும் ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்னர் அன்று பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள பிரெஞ்சு அபிவிருத்திகுழுத் தலைவர் திரு. ரி. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ். அரசாங்க அதிபரும் யாழ், மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் ஆகியோர் உரையாற்றுவர்.

யாழ். பிரெஞ்சு கலாசார நட்புறவுச்சங்கத்தலைவர் திரு. திரு. ஏ. குலேந்திரன் நன்றி தெரிவித்துப்பேசுவார். [மா]

★ மத்தியகிழக்கு, லண்டன்

செல்வோருக்கு

மிகவும் குறைந்த கட்டணத்தில்

GULF AIR டிக்கட்டுகள்

யாழ்ப்பாணத்தில் உடனடியாக

மக்கினென்ஸ் வழங்குகிறது

எந்த நாட்டிற்கும்

எந்த விமானத்திலும்

மிகக்குறைந்த கட்டணத்தில்

விமான டிக்கட்டுகள்

(TRAVELLERS CHEQUES)

பிரயாணக் காசோலைகள்

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான

எம்மிடம்

வங்கியில் அறவிடும் அதே

கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மக்கினென்ஸ்

ட்றவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 8154

## நெல்லியடியில் பதட்டநிலை தணியவில்லை!

[கரவெட்டி]

நெல்லியடியில் கடைகள் இன்னமும் ஒற்றைக் கதவிலேயே வியாபாரத்தை நடத்துகின்றன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் இங்கு ஏற்பட்ட பதட்ட நிலை முற்றாக நீங்கவில்லை. ஜனநடமாட்டமும் மிகக்குறைவாகவே காணப்பட்டது.

நெல்லியடி சினிமாத்தியேட்டர்களில் முதல்காட்சிப்படமட்டும் நேற்று காண்பிக்கப்பட்டது. ஆனால் மிகக்குறைவான ரசிகர்களே காணப்பட்டனர்.

நிலைமை இவ்வாறிருக்க முழுக்கதவுகளையும் திறந்து வியாபாரத்தை நடாத்தும்படி பொலிஸார் வர்த்தகர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல்லியடிப்பகுதியில் வர்த்தகப் பகுதியினர் நடத்திய பாதுகாப்பு சேவையும் துப்பாக்கிச் சூட்டின் பின்னர் இயங்கவில்லை.

நெல்லியடிக்கு அண்மையிலுள்ள புருப்பொறுக்கி என்ற இடத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் பஸ்ஒன்றைமறித்து இளைஞர் ஒருவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற போதிலும் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பங்குத்தந்தை அருட்திரு அ. ஞானப்பிரகாசம் அடிகள் கொடியை ஏற்றிவைப்பார். ஞாயிற்றுக்கிழமை விசேட பூசைப்பலி, தேர்பவனி இடம் பெறும். உற்சவகாலங்களில் தினமும் பகல் அன்னதானமும், தமிழ்நாடு தவத்திருநாதன் அடிகளாரின் சமயப் பிரசங்கமும் இடம்பெறும்.

## புளியங்கூடலில் பால்வண்ணனார் இன்றுஉரை

[யாழ்ப்பாணம்]

தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள தென்இந்திய 'சுத்த சன்மார்க்க' பத்திரிகை ஆசிரியரும் திரு அருட்பிரகாச வள்ளலார் ஸ்ரீஇராமலிங்க சுவாமிகளின் அடியாருமாகிய பால்வண்ணனார் இன்று புளியங்கூடல் ஸ்ரீ மகா மாரிஅம்மன் கோவிலில் 'அருப்பெருஞ் சோதி' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளும் இவ்வைபவத்தில் கலந்துகொள்வார்.

## இப்படியும் நடக்கிறது

இந்தியா செல்லும் பிரயாணிகளுக்குரிய ரயில் பிரயாண டிக்கட்டுகள், ரயில் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய பொது இடங்களில் (பச்சையாகச் சொல்லப்போனால் தனியார் கடைகளில்) விற்பனை செய்யப்படுகிறதா?

இந்திய ரயில் டிக்கட் வழங்குவதில் இப்பொழுது கடைப்பிடிக்கப்படும் புதிய நடைமுறையின்படி முதலில், விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யவேண்டும்.

விண்ணப்பப்படிவம் யாழ். ரயில் நிலையத்துக்கே இன்னும் வந்துசேராத நிலையில் யாழ். நகரில் இப்படிவம் 'ஓகோ' என்று விற்பனைசெய்யப்படுவதுடன் மட்டுமின்றி 'பாஸ்போர்ட்'டுடன் ரூ 350 கொடுத்தால் டிக்கட்டே கைக்கு வந்துவிடுகிறதாம்!

காதோடு காதாக-குறிப்பிட்ட டிக்கட் யாழ்ப்பாணம்-இந்தியா அல்ல. கொழும்பு-இந்தியா!

'ஊர்நோக்கி'

## பாராளுமன்றத்தில் மீண்டும் 'புலிகள்' குரல்!

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது 'புலிகள்' பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது.

லெபனானில் உள்ள இலங்கையரின் நிலைகுறித்தும் இஸ்ரேலியரினால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் இலங்கையர் பற்றியும் சாவகச்சேரி எம் பி. சபையில் கேள்வி எழுப்பினார்.

பாலஸ்தீன மக்களுக்கு சுயராஜ்யம் ஒன்றை அமைக்கும் போராட்டத்துக்கு கூட்டணி என்றுமே ஆதரவாக உள்ளது என்றும் பாலஸ்தீன மக்களுக்காகப் போராடும் இலங்கையரை இலங்கை அரசு தேசிய வீரர்களாகக் கருதி விருது வழங்கவேண்டும் என்றும் திரு. நதரத்தினம் கூறினார்.

அப்போது அரசதரப்பிலிருந்து 'புலிகள்' என்று குரல் எழுந்தது.

'புலிகள்' பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடுகின்றன என்றும் சுதந்திரத்துக்காகப் போராடும் அனைத்துலக மக்களுக்காகவும் புலிகள்' போராடும் என்றும் தெரிவித்த திரு. நவரத்தினம்—

'புலிகள் பற்றி நாம் அக்கறைப்படவில்லை. உண்மையில் அரசு பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு ஆதரவளிக்கின்றதா என்பதையே அறியவிரும்புகிறோம்' என்றார்.

(ம-இ)

## இஸ்ரேலிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

குரிய தகவல்களைத் தெரிவித்ததை அடுத்தே இந்திய அரசு மேற்கொண்ட உத்தரவை வெளியிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

ஹோம் பினன்ஸ் லிமிட்.,

82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனை

எம்மிடம் பாவித்துக் கழிக்கப்பட்ட பத்து (10) பஸ் ரயர்கள் விற்பனைக்கு உண்டு. இவற்றை வாங்க விரும்புவோர் எமது கந்தோரில் வந்து ரயர்களைப் பார்வையிடலாம்.

முகாமையாளர்,
ஹோம் பினன்ஸ் லிமிட்,.
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8310

## மரண அறிவித்தல்

நா. கந்தசாமி

நா. கந்தசாமி யாழ்ப்பாண ஐக்கிய வியபாரச் சங்கத்தின் (யாழ். கிளை) இளைப்பாறிய சிட்டை லிகிதர் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 9-7-82 (இன்று) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

குடும்பத்தினர்
பலகாடு, காரைநகர். 3822

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.